**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காங்கேயம்**

**முன்னிலை:– செல்வி.D. தேன்மொழி, பி.ஏ.,பி.எல்., எல்எல்.எம்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், காங்கேயம்

2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ம் நாள் திங்கட்கிழமை

CC –76/2025

(CNR No.TNTI150014172025)

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | |
|---|---|---|
| 1. | வழக்கு எண். | C.C.No: 76 of 2025 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண்.<br>(Name of the Police Station and Crime Number) | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>காங்கேயம் காவல் நிலையம்,<br>(குற்ற எண். 54/2025)<br>... புகார்தாரர் |
| 3. | எதிரியின் பெயர் (Name of the Accused) | பரமசிவம் (53/2025)<br>த/பெ. அருணாச்சலம்.<br>15A, ,இளம்பிள்ளை புதூர்,<br>கருமாண்டிசெல்லிபாளையம்,<br>பெருந்துறை தாலூகா,<br>ஈரோடு மாவட்டம்.<br>... எதிரி |
| 4. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 5. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 6. | எதிரியின் முகவரி (Residence) | |
| 7. | எதிரியின் வயது (Age) | |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Date of occurrence) | 21.01.2025 |
| 9. | புகார் தேதி (Date of complaint) | 25.01.2025 |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Date of Arrest) | 28.01.2025 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Date of Release on Bail by Police) | 28.01.2025 |
| 12. | Date of Commitment | Not Applicable |
| 13. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Date of commencement of Trial) | 31.10.2025 |
| 14. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 24.08.2026 |

| | | |
|---|---|---|
| | (Closure of Trial) | |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or order) | எதிரி மீதான 281, 106(1) BNS குற்றச்சாட்டுகள் **அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால்** எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை **271(1) BNSS ன் படி விடுதலை** செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>(ii) எதிரி ஏற்கனவே இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 16. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of copy of judgment or finding on accused) | Yes. Copy of the Judgment uploaded on the CIS and made available on E-courts portal<br>தீர்ப்பின் நகல் CIS–ல் பதிவேற்றம் செய்யப்பட்டு, E–Courts இணையதளத்தில் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது. |
| 17. | கால தாமதத்திற்கான காரணம் (Explanation of delay) | No such inordinate delay |

இம்மனுவானது இறுதியாக 17.08.2026ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் நிலை 1 காங்கேயம் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.தமிழ்செல்வம்.,B.C.S.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் நிலுவையில் இருந்து வந்த வழக்கின் ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**தீர்ப்புரை**

இந்த வழக்கில் எதிரி மீது 281 மற்றும் 106(1)BNS ன் கீழ் குற்றம் முறையிடப்பட்டுள்ளது.

**1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**

1.1. இவ்வழக்கில் கடந்த 21.01.2025ம் தேதி மாலை சுமார் 17.30 மணியளவில், காங்கயம் – சென்னிமலை ரோட்டில், திட்டுப்பாறை பஸ் ஸ்டாப் அருகில், இவ்வழக்கில்


D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:41:37 +0530

இறந்துபோன கண்ணன் என்பவர் TN 42 F 2721 HERO HONDA SPLENDOR PRO என்ற இருசக்கர வாகனத்தை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்து, வலதுபுற இண்டிகேட்டரை ஒளிரச் செய்தும், கையால் சைகை செய்தும், மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டைக் கடந்து கிழக்குபுற ஓரத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது, இக்குற்ற அறிக்கையில் கண்ட எதிரி பரமசிவம் என்பவர் TN 38 BP 7539 MARUTI SWIFT என்ற காரை அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, கண்ணன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், அதன் காரணமாக கண்ணன் என்பவருக்கு உடலில் பலத்த காயங்கள் ஏற்பட்டு மரணம் விளைவித்ததாகவும், எதிரி பரமசிவம் என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 281 மற்றும் 106(1) B.N.S.–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் 230 BNSS ன் படி எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் 06.10.2025 அன்று இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால் 31.10.2025 அன்று எதிரி மீது 281, 106(1)BNS ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளார்.

**3. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்:**

3.1) **அ.சா.1 திரு. சக்திவேல்** என்பவர் புகார் அளித்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.2) **அ.சா.2 திருமதி. தாரணி** என்பவர் சம்பவத்தை கேள்விபட்டது குறித்து, சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.


D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:41:41 +0530

3.3) **அ.சா.3 திரு. சண்முகம்** என்பவர் பார்வை மகஜரில் கையெப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.4) **அ.சா.4 திரு. பிரகாஷ்** என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து, சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.5) **அ.சா.5 திரு. விவேகணந்தன்** என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும், புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. பிரிவு 351(1)( b ) BNSS ன் படி வினவுதல்:**

4.1) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இவ்வழக்கில் எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எடுத்துக் கூறி 351(1)(b) BNSS ன் கீழ் 24.08.2026 அன்று வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சியம் என்றும், மேலும் அவர்களது தரப்பில் விசாரிக்க சாட்சியங்கள் இல்லை என்றும் கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

***இவ்வழக்கில் இனி காண வேண்டிய தீர்வு யாதெனில், அரசு தரப்பில் எதிரிமீதான 281, மற்றும் 106(1) BNS ன் கீழான குற்றச்சாட்டுகள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.***



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:41:46 +0530

## 6. தீர்வு

6.1) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. சட்டப்பிரிவு 281 மற்றும் 106(1) BNS ன் கீழ் குற்றம் நிரூபணம் செய்யப்பட எதிரி தனது அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவான செயலை செய்வதன் மூலம் ஒருவருக்கு கொலைக்கு நிகராகாத மரணத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

6.2) இந்த வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக, விபத்து சம்பவத்திற்கு எதிரியின் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவா என்றும், இரண்டாவதாக எதிரி தான் கொலைக்கு நிகராகாத மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும்.

6.3) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கு விபத்து சம்பவத்திற்கு எதிரியின் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவு தான் காரணம் என்பதை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், விபத்தானது எதிரியால் நடைபெறவில்லை என்றும் இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு தவறதலாக எதிரியின் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று எதிரியை விடுதலை செய்யக்கோரினார்.

6.4) இவ்வழக்கில் அரசு தரப்பில் புகார்தாரர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 சக்திவேல், தனது சாட்சியத்தில், விபத்தில் இறந்துபோனவர் தனது மகன் என்றும், கடந்த 21.01.2025 ம் தேதி, காங்கேயம்–சென்னிமலை ரோட்டில், திட்டுப்பாறை அருகே, தனது மகன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி தனது HERO HONDA இருசக்கர வாகனத்தில் சென்று ரோட்டைக் கடக்கும்போது, எதிரே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த MARUTI SWIFT கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதுகுறித்து தனது அண்ணன் மகன் பிரகாஷ் தொலைபேசி மூலம் தனக்கு தகவல் தெரிவித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், விபத்தில் தனது மகனுக்கு கால் மற்றும் உடலின்

பல்வேறு பகுதிகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டதாகவும், அருகிலிருந்தவர்கள் தனியார் ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்து, அவரை காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், பின்னர் மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல பரிந்துரைக்கப்பட்டதாகவும், தான் காங்கேயம் காவல் நிலையம் சென்று விபத்து தொடர்பாக புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும், குறுக்கு விசாரணையில், விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், தகவல் கேட்டுத்தான் தெரிந்துகொண்டேன் கூறியுள்ளார். எனவே இவ்வழக்கில் அ.சா.1 கேள்விநிலை சாட்சியாக இருக்கும் நிலையில், விபத்துக்கு முழுக் காரணம் எதிரியே என்பதும், எதிரி தான் வாகனத்தை அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து இவ்விபத்தை ஏற்படுத்தினார் என்பது இவரது சாட்சியத்தின் மூலம் வெளிக்கொணரப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.5) இவ்வழக்கில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 தாரணி, தனது சாட்சியத்தில், விபத்தில் இறந்துபோனவர் தனது கணவர் என்றும், கடந்த 21.01.2025 ம் தேதி, காங்கேயம்–சென்னிமலை ரோட்டில், திட்டுப்பாறை அருகே, தனது கணவர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி தனது HERO HONDA இருசக்கர வாகனத்தில் சென்று ரோட்டைக் கடக்கும்போது, எதிரே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த MARUTI SWIFT கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதுகுறித்து தனது உறவினரான பிரகாஷ் தொலைபேசி மூலம் தனக்கு தகவல் தெரிவித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், குறுக்கு விசாரணையில், விபத்து குறித்து தனக்கு நேரடியாகத் தெரியாது என்றும், பிறரிடம் கேட்டுத்தான் விபத்து குறித்து தெரிந்துகொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.1–ஐப் போன்றே அ.சா.2 வும் கேள்விநிலை சாட்சியாக உள்ள நிலையில், அ.சா.2–ன் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு உதவும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:41:56 +0530

6.6) மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 சண்முகம் அவரது முதல் விசாரணையில் நானும் எனது நண்பரும் காலை சுமார் 10.00 மணியளவில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.7) இவ்வழக்கில் அரசு தரப்பில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 பிரகாஷ், தனது சாட்சியத்தில், கடந்த 21.01.2025ம் தேதி மாலை சுமார் 17.30 மணியளவில், திட்டுப்பாறை பேருந்து நிலையம் அருகில் நின்றுகொண்டிருந்தபோது, காங்கேயம்–சென்னிமலை ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த இருசக்கர வாகனத்தின் மீது, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், இருசக்கர வாகனத்தில் வந்தவர் கீழே விழுந்து அவரது காலில் இரத்தக்காயம் ஏற்பட்டிருந்ததாகவும், அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், விபத்தில் காயமடைந்தவர் கண்ணன் என்றும், அவரை மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், விபத்து குறித்து அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்ததாகவும், பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், குறுக்கு விசாரணையில், விபத்து சமயத்தில் திட்டுப்பாறையில் உள்ள டீக்கடையில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்ததாகவும், சத்தம் கேட்டு சுமார் 5 நிமிடங்களுக்குப் பிறகே சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்ததாகவும், அங்கு சென்ற பின்னர்தான் காயமடைந்தவர் தனது தம்பி கண்ணன் எனத் தெரிந்துகொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி கூறியதை பரிசீலனை செய்யும் போது அ.சா.4 கண்ணுற்ற சாட்சியாக இருந்தபோதிலும், சம்பவத்தின்போது எதிரி அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை இயக்கியதன் காரணமாகவே இவ்விபத்து நிகழ்ந்தது என்பதை தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுக் கூறவில்லை. மேலும், அவர் சம்பவத்தின் போது டீ குடித்துக்கொண்டிருந்தேன் என்று கூறியுள்ள நிலையில், அவர் விபத்திற்கு



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:42:01 +0530

யாருடைய அஜாக்கிரதை என்று, அரசு தரப்பில் எதிரியின் கவனக்குறைவான செயலை நிரூப்பிக்கும் விதத்தில் சாட்சியம் அளிக்கவில்லை.

6.8) வழக்கு கோப்புகளை பார்வையிட்டு சாட்சியம் அளித்த புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 விவேகானந்தன், அ.சா.1 சக்திவேல் அளித்த புகாரின் அடிப்படையில், காங்கேயம் காவல் நிலைய குற்ற எண். 54/2025 – U/s.281, 125(a) BNS–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும், பின்னர் திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கண்ணன் என்பவரின் இறப்பு தொடர்பான தகவல் கிடைத்ததன் பேரில், வழக்கின் சட்டப்பிரிவுகள் 281, 125(a) BNS–லிருந்து 281, 106(1) BNS ஆக மாற்றம் செய்யப்பட்டு, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து, சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், கண்ணன் என்பவரின் பிரேத விசாரணை மேற்கொண்டு, பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியதாகவும், எதிரி பரமசிவத்தை கைது செய்து நிலையப் பிணையில் விடுவித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், விபத்தில் சம்பந்தப்பட்ட TN 38 BP 7539 MARUTI SUZUKI SWIFT கார் மற்றும் TN 42 F 2721 HERO HONDA SPLENDER PRO இருசக்கர வாகனம் ஆகியவற்றை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளைப் பெற்றதாகவும், சம்பந்தப்பட்ட மருத்துவர்களை விசாரித்து மருத்துவ ஆவணங்களைப் பெற்றதாகவும் கூறியுள்ளார். இறுதியாக, புலன் விசாரணையை முடித்து, எதிரி பரமசிவம் மீது சட்டப்பிரிவுகள் 281 மற்றும் 106(1) BNS–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

6.9) மேலும் விபத்தில் இறந்துபோன கண்ணன் என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்த திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தடயவியல் மருத்துவத்துறை மருத்துவர் திரு.முத்துக்குமார் இறந்துபோன கண்ணன் என்பவரது இறப்பின் காரணம் குறித்து ***"Cause of Death: The deceased died due to combined effects of***



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:42:06 +0530

***aspiration of food material into air passages(up to terminal bronchioles) and complications(sepsis and multi organ dysfunction) of blunt injuries sustained to left lower limb"*** என்று சான்று வழங்கியுள்ளார். மேற்படி பிரேத பரிசோதனை சான்றிதழை(அ.சா.ஆ.11) பரிசீலனை செய்ததில் இறந்தவருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களால் தான் அவர் இறந்துள்ளார் என்பது நிரூபிக்கப்படுகிறது.

6.10) அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான அரசு தரப்பு சாட்சியங்கள் தகுந்த சாட்சியம் அளிக்காத நிலையில் இவ்வழக்கில் வழக்கு கோப்புகளை பார்வையிட்டு அதனடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளித்துள்ள காவல் ஆய்வாளர் திரு. விவேகானந்தன் (அ.சா.5)ன் சாட்சியத்தை மட்டும் நிலைமுறை சாட்சியமாக எடுத்துக்கொள்ள முடியாது. மேற்படி அ.சா.5 ன் சாட்சியத்தை வைத்துக்கொண்டு, எதிரி மீதான வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்காண் சூழ்நிலைகளும், புகார்தாரரான அ.சா.1 ன் சாட்சியமும் எதிரி மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

6.11) இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான மொத்த சாட்சிகளின் சாட்சியத்தை ஒரு சேர பரிசீலனை செய்ததில் இரு வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்பதில் மாற்றமில்லை. ஆனால், இவ்வழக்கு சம்பவ சமயத்தில் எதிரி தான் வாகனத்தை வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து இவ்விபத்தை ஏற்படுத்தி அதன் மூலம் கண்ணன் என்பவர் இறந்துள்ளதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

6.12) மேற்படி சாட்சியங்களை வைத்து அரசு தரப்பு வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று உறுதி செய்ய இயலாது. ஏனெனில் அ.சா.1 சக்திவேல் புகார்தாரர் சாட்சியாக உள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.4 கண்ணுற்ற சாட்சியாகவும் உள்ளார்கள். இவ்வாறு இருக்கையில் அ.சா.1,

மற்றும் அ.சா.4 ஆகியோர்களின் சாட்சியங்கள் இவ்வழக்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆனால் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு அ.சா.1 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் எதிரியின் குற்றங்களை நிரூபணம் செய்யும் வகையில் தெளிவாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே அ.சா.1 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் அளித்திடாதது அரசு தரப்பிற்கு பாதகமாக அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.13) மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் எதிரியின் மீதான 281, மற்றும் 106(1) BNS ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து மேற்கண்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக,**

*(i) எதிரியின் மீதான 281, மற்றும் 106(1)BNS ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை 271(1) BNSS ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.*

*(ii) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால், வழக்கு சொத்து குறித்து எவ்வித உத்தரவும் இல்லை.*

*(iii) எதிரி ஏற்கனவே இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்குபின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.*



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:42:17 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று, 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் வைத்து அவையறியப் பகரப்பட்டது. மேலும், அன்றே இவ்வுத்தரவு CIS–ல் பதிவேற்றம் செய்யப்பட்டு, e–Courts இணையதளத்தில் கிடைக்கப்பெறுமாறு செய்யப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:42:21 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
காங்கேயம்.

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| வரிசை எண் | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம் | முதல் விசாரணை தேதி | குறுக்கு விசாரணை தேதி |
|---|---|---|---|---|
| அ.சா.1 | திரு. சக்திவேல் | புகார்தாரர் சாட்சி | 06.04.2026 | 06.04.2026 |
| அ.சா.2 | திருமதி. தாரணி | கேள்விநிலை சாட்சி | 06.04.2026 | 06.04.2026 |
| அ.சா.3 | திரு.சண்முகம் | பார்வை மகஜர் சாட்சி | 06.04.2026 | 06.04.2026 |
| அ.சா.4 | திரு. பிரகாஷ் | கண்ணுற்ற சாட்சி | 24.07.2026 | 24.07.2026 |
| அ.சா.5 | திரு.விவேகானந்தன் | புலன் விசாரணை அதிகாரி | 10.08.2026 | 10.08.2026 |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

| வரிசை எண் | சான்றாவணங்கள் | சாட்சிகள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 38 BP 7539 MARUTI SUZUKI SWIFT) | அ.சா.5 |
| அ.சா.ஆ.8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 42 F 2721 HERO HONDA SPLENDER PRO) | அ.சா.5 |
| அ.சா.ஆ.9 | விபத்து பதிவேடு (கண்ணன்) | அ.சா.5 |
| அ.சா.ஆ.10 | இறப்பு இண்டிமேசன் | அ.சா.5 |
| அ.சா.ஆ.11 | பிரேத பரிசோதனை சான்று | அ.சா.5 |

**அரசு தரப்பு சான்று பொருள்கள்:–**

இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், எதிரி தரப்பு சான்றாவணங்கள், எதிரி தரப்பு சான்று பொருள்கள்:–**

இல்லை.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:42:27 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
2. எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவாக, எதிரி வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.
4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
5. தீர்ப்புரை நகல் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.